2017 ஜூலை 12]

தேர்வு வாரியத்தை Medical Recruitment Board–ஐ உருவாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) Board–ஐ உருவாக்கியது மட்டுமல்லாமல், உருவாக்கிய இந்த 5 ஆண்டுக்காலங்களில் 21,023 பேரை நியமித்துள்ளார்கள். உலக வரலாற்றிலேயே இவ்வளவு பணிகளுக்கு நியமனம் நடந்தது கிடையாது. செவிலியர்கள் மட்டும் 9,990 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். நாளைய தினம் 600 பேருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பணி ஆணை வழங்கவிருக்கிறார்கள். நேற்றைக்கு முன்தினம்கூட நம்முடைய குன்னூர் உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள் கூறிய Technician post–க்கு 150 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கினார்கள். செய்தித்தாள்களில் நல்ல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நீங்கள் குறிப்பிடுகின்ற அத்தனை செய்திகளையும் நான் பார்த்துக்கொண்டிருக்கின்றேன். அரசு வேகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

188—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***9550—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லாவரம் தொகுதி, பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம் தொகுதி, பல்லாவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம்

கட்டுவது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய எதிர்கால நம்பிக்கைக்குரிய தலைவர், எங்கள் வழிகாட்டி, செயல் தலைவர், எதிக்கட்சித் தலைவர் அண்ணன் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சென்னை புறநகரிலே உள்ள மிகப் பெரிய சட்டமன்றத் தொகுதி. 7 இலட்சம் மக்கள்தொகை கொண்ட இந்த சட்டமன்றத் தொகுதியிலே உள்ள வட்டாட்சியர் அலுவலகம், முன்பு, தாம்பரத்திலிருந்து ஆலந்தூர் தனியாகப் பிரிக்கப்பட்டு, பிறகு ஆலந்தூரிலிருந்து பல்லாவரம் தனியாகப் பிரிக்கப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் இல்லாததால், பல்லாவரம் நகராட்சி வளாகத்திலேயே நகராட்சி அலுவலகமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அலுவலகம் மக்களுக்குப் போதுமானதாக இல்லை. ஆகவே, அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இடம் தேர்வு செய்யவேண்டுமென கடந்த மானியக் கோரிக்கையில் நான் குறிப்பிட்டுப் பேசியிருந்தேன். ஆனால், தற்போது அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன். அந்த இடம் எந்த இடத்தில் அமைய உள்ளது என்பதையும், அந்த இடத்தில் எப்போது கட்டடத்தைக் கட்டுவார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூலை 12]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வட்டாட்சியர் அலுவலகத்திற்கான இடத்தைப் பற்றியும், கட்டுமானப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்ற விவரத்தையும் கேட்டிருக்கின்றார்கள். அரசாணை நிலை எண் 70, வருவாய்த் துறை, நாள் 10–2–2016–ன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்லாவரம் வட்டம் புதிதாக உருவாக்கப்பட்டது. மக்களுடைய தேவைகளை அறிந்து, புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசுதான் அதை புதிய வட்டமாக உருவாக்கித் தந்தது. 27–2–2016 முதல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பல்லாவரம் நகராட்சி அலுவலக வளாகத்திற்குள் உள்ள கட்டடத்தில் வட்டாட்சியர் அலுவலகம் தற்காலிகமாக இயங்கிவருகிறது. இவ்வலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் வட்டம் எண் 21, ஜமீன்பல்லாவரம் கிராமத்தில், கிராம புல எண் 214 T.S. No. 84/2 வார்டு 49 'D' பிளாக் களம்புறம்போக்கில் 1,557 சதுர மீட்டர், அதாவது 38 செண்ட் கொண்ட காலி நிலத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அரசாணை பல்வகை எண் 125, வருவாய்த் துறை, நாள் 21–4–2017–ன்படி வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு ரூபாய் 2 கோடியே, 39 இலட்சத்து, 32 ஆயிரம் ஒதுக்கீடு செய்தும், வட்டாட்சியர் குடியிருப்பு கட்டுவதற்கு ரூபாய் 22 இலட்சத்து 47 ஆயிரம் ஒதுக்கீடு செய்தும் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டின் பேரிலே, தற்போது தொழில்நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு, விரைவிலே கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி அவர்கள்.

திரு. இ. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அந்த வட்டம் பிரிக்கப்பட்டாலும், எங்களுடைய ஆட்சிக் காலத்திலும் வட்டங்கள் பிரிக்கப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தாம்பரத்திலிருந்து ஆலந்தூர் தனி வட்டமாக உருவாக்கப்பட்டது. ஆக, உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் வட்டங்கள் பிரிக்கப்பட்டன. எங்களுடைய ஆட்சிக் காலத்திலும் வட்டங்கள் பிரிக்கப்பட்டன.

நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, வட்டாட்சியர் அலுவலகம் பிரிக்கப்படுவது முக்கியமல்ல. அதில் பணிபுரியும் கிராம நிருவாக அதிகாரிகளை நியமிப்பதுதான் முக்கியம். பல்லாவரம் வட்டத்தில் மொத்தம் 27 கிராமங்கள் இருக்கின்றன. 27 கிராமங்களில், இந்த ஆட்சியில், 13 கிராம நிருவாக அலுவலர்கள்தான் பணியில் இருக்கிறார்கள். 14 கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன. ஆகவே, நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இடம் தேர்வு செய்வது முக்கியமல்ல. கட்டடம் கட்டி முடிக்கப்படுவது மட்டும் முக்கியமல்ல, இந்தத் துறைக்குண்டான அதிகாரிகளை பணியில் அமர்த்தி, மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், என்னுடைய பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியிலே கிராம நத்தம் வீட்டுமனைப் பட்டாக்களில் வசிக்கும் 1,500 குடும்பங்களுக்கு இன்னமும் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. பல்லாவரம் நகராட்சிப் பகுதியிலும் மலைப் புறம்போக்கு பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. அதையும், தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இவற்றையெல்லாம் இந்த அரசு செயல்படுத்துமா என்பதை நான் அன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அவர்களுடைய ஆட்சியிலும் புதிய வட்டங்கள் பிரிக்கப்பட்டன என்றார். நாங்கள் அதை மறுக்கவில்லை. உங்களுடைய ஐந்து ஆண்டுகால ஆட்சியிலே வெறும் 14 வட்டங்கள்தான் பிரிக்கப்பட்டன. ஆனால், 70 வட்டங்களைப் பிரித்துக் கொடுத்த அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கட்டடங்களைப் பற்றிப் பேசினார். நேற்றுகூட, விதி 110–ன்கீழ் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு

2017 ஜூலை 12]

விழாவை முன்னிட்டு, 100 கோடி ரூபாயில் மூன்று மாவட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களை வழங்கிய அரசு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே இன்றைக்கு 8,500 கட்டடங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவலாக இந்த அவையின் முன்வைக்கின்றேன்.

அதேபோல, பட்டா வழங்குவது பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். நத்தம் நிலங்களில் வசிப்பவர்களுக்கு உடனடியாக உரிய பட்டா வழங்கப்பட்டு வருகிறது. அதற்காக ஒவ்வோர் ஆண்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அந்த இலக்கு ஒவ்வோர் ஆண்டும் உரிய காலவரையறைக்குள் முடிக்கப்பட வேண்டும் என்கிற அடிப்படையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வீட்டுமனைப் பட்டாக்களை, ஏழையெளிய மக்களுக்கு வழங்கி வருகிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழ்ச்செல்வன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் காலியாக இருப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம்மூலம் கிராம நிருவாக அலுவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவ்வாறு தேர்வு செய்யப்படும் கிராம நிருவாக அலுவலர்கள் உயர் கல்வித் தகுதி பெற்றிருப்பதால், உயர் பதவிக்கு தேர்வாகி, அந்தப் பதவிகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். அதனால் காலிப் பணியிடங்கள் ஏற்படுவதும், அவை உடனடியாக நிரப்பப்படுவதும் தொடர் நடவடிக்கையாக நடைபெற்றுவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதிகளில் ஆய்வு செய்து, உடனடியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமனம் செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2017 ஜுலை 12

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. ரா. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழை நாளும் பாடி, எளிமையின் சிகரம், வெள்ளுடை வேந்தர் மாண்புமிகு முதலமைச்சர் பெருமகனாரை வணங்குகின்றேன். பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பலூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மிகவும் பழமையான கட்டடம் ஆகும். அந்தக் கட்டடத்தின் மேற்கூரையில் இருக்கின்ற சிமென்ட் தளம் உரிந்து கீழே விழும் நிலையில் உள்ளது. பொது மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு பல முறை இந்தக் கோரிக்கையினை நான் இந்த அவையில் வைத்திருக்கின்றேன். ஆகவே, அந்தப் பழமையான வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்திற்குப் பதிலாக புதிய வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு புதிதாகப் பிரிக்கப்பட்டிருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களுக்கு மட்டுமல்லாமல், மிகவும் பழமையான கட்டடங்களுக்கும் புதிய கட்டடங்களை உருவாக்கித் தருகிறது. அந்தவகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெரம்பலூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மிகவும் பழமையாக இருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நிதிநிலைமைக்கு ஏற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*